தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 ஏப்ரல் 29, சனிக்கிழமை.

சித்திரை 16, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர். மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

வறியவராகிய தாழ்த்தப்பட்ட மக்களின் கடும் பசியைத் தீர்க்க வேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருள் தமக்குப் பிற்காலத்தில் பயன்படுமாறு சேமித்து வைக்கும் இடமாகும்.

1. இரங்கற் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. இ. எல். இராகவ முதலியார் அவர்கள் 21—4—1989 ஆம் நாள் அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. இ. எல். இராகவ முதலியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில பணியாற்றியுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்).

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று 20 வினாக்கள் இடம் பெறுவதால் அருள்கூர்ந்து துணைக் கேள்விகளைக் குறைத்து நேரடியாக அடுத்தடுத்த மூலக் கேள்விகளுக்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.